கவனித்து வெங்காயத்தின் விலை உள்நாட்டிலே ஏறாமல் இருப்பதற்கு அரசாங்கம் கண்காணித்து, தக்க அளவிலே ஏற்றுமதி செய்வதற்கு வழிவகை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: நமது நாட்டிலே எல்லாப் பொருள்களின் விலையும் திடீரென்று ஏறுவதெல்லாம் வியாபாரிகளின் தந்திரத்தால்தான் என்பது எல்லோருக்கும் தெரியும். அதிலே குறிப்பாக எந்தப் பொருட்களின் உற்பத்தி குறைகின்றனவோ அந்த நேரத்திலே விலை ஏறும். அந்தப் பொருள் உற்பத்தி அதிகமாக இருக்கிற சீசனிலே விலை குறையும். ஏற்றுமதி காரணமாக மாத்திரம் அந்த விலை ஏற்றம் வருவதில்லை. விலை ஏற்றத்தைத் தடுக்கும் நடவடிக்கைகளை மத்திய அரசாங்கமும் எடுத்துக்கொண்டிருக்கிறது என்பதை இங்கே சொல்லிக் கொள்கிறேன்.

சுற்றுலாப் பேருந்துப் பணி

* 321 வினா.—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழக போக்குவரத்துத் துறை பேருந்துகள் மூலமாக சென்னை நகரிலிருந்து மாநிலத்தின் முக்கியப் பகுதிகளுக்கு சுற்றுலா சென்று வர பயணிகளுக்கு ஏற்பாடு செய்துதர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தற்போது இல்லை.

திரு. என். கிட்டப்பா: வாரம் ஒரு முறை மாமல்லபுரத்திற்குச் செல்ல தனிப் பேருந்துகள் விடுவதுபோல், தமிழ்நாட்டிலே இருக்கும் முக்கியப் பகுதிகளுக்கு விடுமுறை நாட்களிலே சென்று வர தனி சுற்றுலாப் பேருந்துகளை விட தமிழக போக்குவரத்துத் துறை பரிசீலித்து ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: பேரவைத் தலைவர்களே, இந்த சுற்றுலாவிற்காக பேருந்துகளை விடும் பணியை சுற்றுலா வாரியம் கவனித்து வருகிறது. அவர்களிடத்திலே இரண்டு சிர்வசதி பேருந்துகள் இருக்கின்றன. இந்தப் பணியை அவர்கள் மேற்கொள்வதுதான் சரியே ஒழிய, தமிழக போக்குவரத்துத் துறை மேற்கொள்வது சரியல்ல என்று சொல்லிக் கொள்கிறேன்.